# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0823/2016/ந

ஆணை எண்: 0183/2016

நாள்: 03/12/2016

திரு. செ. முருகன்,
த/பெ.செல்லப்பன்,
எண்.69/21, புளியவிளைத் தெரு,
வடசேரி, கன்னியாகுமரி மாவட்டம் – 629 001. - மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
நாகர்கோவில் நகராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம் – 629 001. - எதிர் மனுதாரர்

**ஆணை:-**

மனுதாரரது 08.08.2016 நாளிட்ட முறையீட்டு மனு 11.08.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு எண்.0823/2016 ஆக பதிவு செய்யப்பட்டது.

மேற்படி முறையீட்டு மனுவில் 08.03.2002ல் போலி ஆவணங்கள் மூலம் பட்டாவில் பெயரில்லாத, நககாட்சியில் இறப்புச் சான்று பதிவு செய்யப்படாத யார் என்று தெரியாத சிவகாமி லெட்சுமி பெயரில் வட்டம் எண்.30/1 172 முதல் 175 வரை உள்ள தனது முப்பாட்டனார் சொக்கலிங்கம் பெயரில் இருந்த வரிவிதிப்பை மாற்றம் செய்து வரி விதிப்பு எண்.46088 என நகராட்சி ஆணையரால் வழங்கப்பட்டுள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து 12.08.2016 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் நகராட்சி ஆணையரது அறிக்கை கோரப்பட்டது.

மேலும், 06.10.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கு அழைப்பாணை (அ.ம.எண்: 0823/16/ந நாள்: 06.09.2016) அனுப்பப்பட்டது. அதன்படி விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் முறையீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு தனது பாட்டனாரின் (திரு.சொக்கலிங்கம்) பெயரில் இருந்த வீடுகளுக்கான ரசீதினை சிவகாமி லட்சுமி என்பவர் பெயரில் வீட்டு வரி ரசீது திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும், 8.3.02க்கு முன்பு தனது தாத்தா பெயரில் ரசீது உள்ளதற்கு எவ்வித ஆதாரமும் தன்வசமில்லை எனத் தெரிவித்து வாக்குமூலம் அளித்துள்ளார்.

இம்முறை மன்ற நடுவ 26.10.2016 மற்றும் 16.11.2016 நாளிட்ட அறிவிப்பாணைகளைத் தொடர்ந்து நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.3195/16/அ5 நாள்: 03/11/2016 கிடைக்கப்பெற்றது. மேற்படி அறிக்கையில் வார்டு எண்.28, எம்.எல்.ரோடு, கதவு எண்கள் 171,172,176,183,175, வரிவிதிப்பு எண்கள் 44087, 44088, 44089, 44098, 45109 ஆகிய கட்டிடங்களுக்கு பெயர் மாற்றம் செய்ய கேட்டு திரு.C. முருகன் என்பவர் கோரியிருந்தாரெனவும், தற்போதைய வரிவிதிப்பாளர் திரு. ஆறுமுகபெருமாள் என்பவரால்

மேற்படி விண்ணப்ப மனுவில் குறிப்பிட்டுள்ள கட்டிடங்களுக்கு பெயர் மாற்றம் செய்யக் கூடாதென மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு (MP No.18775/2002 in A.S. No.794/2002–ல் வழக்கு தொடரப்பட்டுள்ளதெனவும், மேற்படி வழக்கில் 13.02.2003 அன்று வழங்கப்பட்ட நீதி மன்ற உத்தரவின்படி மேற்படி கட்டிடங்களின் உரிமை மீது எவ்வித மாறுதல்களும் செய்யக்கூடாதென நிரந்தர தடையாணை விதிக்கப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இது குறித்து மனுதாரர் திரு.முருகன் என்பவருக்கு நகராட்சியின் 11.03.2016ம் நாளிட்ட அறிவிப்பின்படி தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மனுவில் குறிப்பிட்டுள்ள கட்டிடத்தின் உரிமை சம்மந்தமாக நீதி மன்றத்தின் தீர்ப்பு வரப்பெற்ற பின் அதனடிப்படையில் மேல் நடவடிக்கை தொடப்படுமெனவும் நகராட்சி ஆணையரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டப் பிரிவு 10 (3) (b) மற்றும் 10 (3) (c)ன்படி நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும், முறையீட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு எதனையும் தொடர்பான பொருட்பாடுகளில் முறை மன்ற நடுவர் விசாரணை செய்தல் கூடாது." எனவே, மேற்படி சட்டக் கூறுகளின்படி மனுதாரரது முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவர் விசாரணைக்கு உதந்ததல்ல என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2016–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3–ஆம் நாள் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருதுக்காக.

5.12.16

பெறுநர்

1. திரு. செ. முருகன்,
 த/பெ.செல்லப்பன்,
 எண்.69/21, புளியவிளைத் தெரு,
 வடசேரி, கன்னியாகுமரி மாவட்டம் – 629 001.

2. நகராட்சி ஆணையர்,
 நாகர்கோவில் நகராட்சி,
 கன்னியாகுமரி மாவட்டம் – 629 001.